**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
------
**அசல் வழக்கு எண். 60/2021**

**2026 ஆம்** வருடம் பிப்ரவரி மாதம் 03 ஆம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியான பி.வா.சா.1-இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வெங்கடேஷ் பிரபு | ஜாதி | : | |
| த.பெ | : | பாலகிருஷ்ணன் | தொழில் | : | இந்திய ராணுவம் |
| கிராமம் | : | அய்யம்பாளையம் | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 44 /2026 |
| தேதி | : | 03.02.2026 | | | |

வாதி தரப்பு குறுக்கு **விசாரணை**

1 ஆம் பிரதிவாதி பாலகிருஷ்ணன் உங்கள் தகப்பனார் என்றால் சரிதான். 2 ஆம் பிரதிவாதி வைரம் உங்கள் தாயார் என்றால் சரிதான். 3,4 பிரதிவாதிகளான பவானி, சந்திரபிரபா ஆகியோர் உங்கள் சகோதரிகள் என்றால் சரிதான். 5 ஆம் பிரதிவாதி சரவணன் உங்கள் சகோதரர் என்றால் சரிதான். இந்த வழக்கு எந்த சர்வே எண்ணிற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சர்வே எண். 1006/975 ஆகும். சர்வே எண். 1006/975 -க்கு 2 ஆம் பிரதிவாதி பிரேமலதாவிற்க்கு பட்டா கொடுத்திருந்தார்கள் என்றால் சரிதான். 2 ஆம் பிரதிவாதி மேற்சொன்ன இடத்தை பட்டா பெறுவதற்கு முன்பே வீட்டு வரி கட்டி, தண்ணீர் குழாய் இணைப்பு பெற்று அனுபவித்து வந்தார் என்றால் தண்ணீர் குழாய் இணைப்பு இருந்தது , யாரும் அனுபவிக்கவில்லை. தாவா சொத்து ஆரம்பத்தில் 1 ஆம் வாதியின் தந்தை சடையாண்டி பாப்புரெட்டியின் தாயாரான இராமாயி அம்மாளுக்கு பாத்தியப்பட்டு அவர் அனுபவம் செய்து வந்த சொத்து என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இராமாயி அம்மாள் அனுபவத்திற்கு பிறகு மேற்சொன்ன சடையாண்டி பாப்புரெட்டி அனுபவித்து வந்து அதன் பின்பு அவரது மகனான 1 ஆம் வாதி தாவா சொத்தை அனுபவித்து வந்து அவரது பேரில் அய்யம்பாளையம் பேரூராட்சியால் வீட்டு வரி விதிப்பு செய்யப்பட்டது என்றால் அனுபவித்து வரவில்லை அவர்கள் வார்டு மெம்பராக இருந்ததால் சொத்து வரி , வீட்டு வரி உற்பத்தி செய்து கொண்டார்கள்.1 ஆம் வாதி பேரில் வரி விதிப்பு ஏற்பட்ட சொத்திற்கு தான் 2 ஆம் வாதிக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல.

நீங்கள் ராணுவத்தில் பணிபுரிந்து வருகிறீர்கள் என்றால் சரிதான். உங்களுக்கும், வாதி குடும்பத்திற்கும் ஏற்கனவே நிலக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் சந்து தொடர்பாக அசல் வழக்கு எண்.427/2004 என்ற வழக்கு நடந்தது என்றும் அந்த வழக்கிற்கு மேல் முறையீடு AS.75/2007 திண்டுக்கல் சார்பு நீதிமன்றத்திலும், அதன் பிறகு 2 ஆவது மேல்முறையீடு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக் கிளையில் SA .120/2013 என்ற வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் என் தந்தை இறந்த

பிறகு நாங்கள் ஒரு தரப்பினராக சேர்ந்து கொண்ட பிறகு தான் வழக்கு பற்றி எனக்கு தெரியும். நிலக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் திண்டுக்கல் சார்பு நீதிமன்றத்தில் இவ்வழக்கின் வாதிகளின் தகப்பனாருக்கு சாதகமாக தீர்ப்பானதால் தான் அதனை எதிர்த்து இரண்டாவது மேல்முறையீடு உங்களது தரப்பில் சென்றுள்ளீர்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன இரண்டாவது மேல்முறையீடானது உங்கள் வீட்டிற்கு பின்புறமும், வாதிகள் வீட்டிற்கு பின்புறமும் உள்ள இடம் தொடர்பான வழக்கு என்றால் அந்த வழக்கு பற்றி எனக்கு முழுமையாக தெரியாது.

வாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக இவ்வழக்கு வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor